## கரூர் மாநகராட்சி

**2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## <u>பொருள்கள்</u>

**1)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவு வாகன எண்.TN47AH6364–க்கு (SCORPIO) வாகனம் ஆயில் சர்விஸ், பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Mahindra & Mahindra நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மனை Siva Auto Mobiles Pvt.Ltd, Karur நிறுவனம் நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.17254/– வழங்கியுள்ளது. மேற்படி மதிப்பீட்டு பட்டியலில் உள்ளவாறு TN47 AH 6364–க்கு (SCORPIO) வாகனம் ஆயில் சர்விஸ், பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி இதற்கான செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.17254/–ஐ மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்லாம்.
3)வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Siva Auto Mobiles Pvt.Ltd, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(இ7/2548/2023)**

**தீர்மான எண்.1044** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவு ஈப்பு வாகன எண்.TN47 AH 6364 Mahendra Scorpio வாகனத்திற்கு தேவையான (235X65 R17) அளவுள்ள டயர்–4, டியூப்–4 மற்றும் பிளாப்–4 எண்ணம் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விலைப்புள்ளியின் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sai Service Station, 764, Selam main Road, Vengamedu, Karur | 57800 |
| 2 | V.M Service Station, Karur | 59600 |
| 3 | SRS Alignment, Kovai Road, Karur | 59392 |

<u>அலுவலக குறிப்பு</u>
1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sai Service Station, 764, Selam main Road, Vengamedu, Karur நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2)மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி Sai Service Station, 764, Selam main Road, Vengamedu, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும். மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
3)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.57800/–ஐ குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ7/2219/2023)**

**தீர்மான எண்.1045** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**3)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்.TN47AL3569 TATA ACE–க்கு 2022–2023–ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் புதுப்பிக்க மராமத்து மற்றும் பழுதுகள் பணிகள் செய்ய 20.03.2023–ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

RAPAIR AND MAINTENANCE WORK

| வ.எண் | பணிமனையின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டர்ஸ், கே.கே.கார்டன், ஈரோடு | **112159** |
| 2 | மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | **115350** |
| 3 | ஓம் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | **115250** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**
**1)**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள காந்தி மோட்டர்ஸ், கே.கே.கார்டன், ஈரோடு நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
**2)**வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**112159/–** பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(இ7/1353/2023)**

**தீர்மான எண்.1046** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**4)** கரூர் மாநகராட்சி பொது சுகாதரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்.TN47 AL 3512 TATA ACE–க்கு 2022–2023–ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் புதுப்பிக்க மராமத்து மற்றும் பழுதுகள் பணிகள் செய்ய 20.03.2023–ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

RAPAIR AND MAINTENANCE WORK

| வ.எண் | பணி மனையின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டர்ஸ், கே.கே.கார்டன், ஈரோடு | **105551** |
| 2 | மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | **108950** |
| 3 | ஓம் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | **114220** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
**1)**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள காந்தி மோட்டர்ஸ், கே.கே.கார்டன், ஈரோடு நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
**2)**வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**105551/–** பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(இ7/2139/2023)**

**தீர்மான எண்.1047** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**5)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவு வாகன எண் ஈப்பு வாகன எண்.TN47 BA 9546 Innova crystal வாகனத்திற்கு 20000 கிலோமீட்டருக்கான ஆயில் சர்வீஸ் மற்றும் இதர செக்கப் பணிகள் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மனை TOYOTA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மனை Coimbatore Aanamallais Agencies Pvt.Ltd, Karur நிறுவனம் நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.21077/– வழங்கியுள்ளது, மேற்படி மதிப்பீட்டு

பட்டியலில் உள்ளவாறு TN47 BA 9546 Innova crystal வாகனம் ஆயில் சர்விஸ் பணிகள் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி இதற்கான செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.21077/—ஐ மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3)வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Coimbatore Aanamallais Agencies Pvt.Ltd, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். (இ7/2315/2023)

**தீர்மான எண்.1048** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான TN47 AL 6783 TATA ACE வாகனத்திற்கு பழுது பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Shri C.M Motors Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.11452/—ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/— (ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.11452/— (பதினோராயிரத்து நானூற்று ஐம்பத்திரண்டு மட்டும்) மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3)வாகனத்தின் அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிகள் கருத்தில் கொண்டு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
4)பொது சுகதார பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணை Shri C.M Motors Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். (இ7/8822/2022)

**தீர்மான எண்.1049** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**7)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்—II வார்டு—32 பகுதியில் உள்ள பசுபதீஸ்வரா மாநகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் வருகின்ற மார்ச் / ஏப்ரல்—2023 பொது தேர்வு மையமாக செயல்பட உள்ளதால் 16 வகுப்புகளுக்கு வண்ணம் அடித்தல், பழுதடைந்த மின் விசிறிகள், டியூப் லைட்கள் மற்றும் பைப் லைன் குழாய்களை மாற்றி அமைக்கும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.40இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.40இலட்சத்திற்கு பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/2023)

**தீர்மான எண்.1050** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**8)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/AMRUT-2, நாள்25.02.2022 மற்றும் 21.03.2022ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் — Untied Grant 2021—2022ன்கீழ் கீழ்கண்ட 5 பணிகள் மேற்கொள்வதற்கு உரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| 15th CFC - 2021 – 22 (UnTied Grant) | | |
|---|---|---|
| வரிசை எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ,லட்சத்தில்) |
| 1 | கரூர் மாநகராட்சி சுங்ககேட் பகுதியில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 15.00 |
| 2 | கரூர் மாநகராட்சி வார்டு எண்.2 வேலுச்சாமிபுரம் பகுதியில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 11.00 |
| 3 | கரூர் மாநகராட்சி வார்டு எண்.14 என்.எஸ்.கே நகர் கிழக்கு பகுதியில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 10.00 |
| 4 | கரூர் மாநகராட்சி வார்டு எண்.41 ராயனூார் பகுதியில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 11.00 |
| 5 | கரூர் மாநகராட்சி வார்டு எண்.48 காளியப்பனூார் பகுதியில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 11.00 |

மேற்குறிப்பிட்டுள்ள 5 பணிகளை நிர்வாக நலன் கருதி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் மேற்கண்ட 5 பணிகளுக்கு பதிலாக கீழ்க்கண்ட 6 பணிகளை ரூ.58.00லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **15வது நிதிக்குழு மான்யம் Untied Grant 2021–2022** ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ.58.00 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ( ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.4 வாங்கப்பாளையம் 14இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சுற்றுச்சுவர் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 2 | வார்டு எண்.19 பசுபதிபாளையம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 4.00இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சுற்றுச்சுவர் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |
| 3 | வார்டு எண்.36 திருமாநிலையூர் 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி சுற்றுச்சுவர் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |
| 4 | வார்டு எண்.48 காளியப்பனூார் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சுற்றுச்சுவர் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 8.00 |
| 5 | வார்டு எண்.38 திண்ணப்பா நகர் 4.60 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 6 | வார்டு எண்.41 ஜீவா நகர் 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| | **மொத்தம்** | **58.00** |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணினை மேற்கொள்வதற்கு அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1349/2021)

**தீர்மான எண்.1051** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**9)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26க்குட்பட்ட காமராஜபுரம் மெயின் ரோடு பகுதியில் உள்ள புதைவடிகால் ஆய்வுக் குழி எண்.116–117 இடையில் உள்ள புதைவடிகால் மெயின் லைன் பழுதடைந்து சாலையில் பள்ளம் ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் சென்று சுகாதாரம் பாதிக்கும் நிலையில் உள்ளதால் மேற்படி புதைவடிகால் மெயின் லையன் 450mm அளவுள்ள ஆர்.சி.சி., பைப் 85மீட்டர் நீளத்தில் அமைக்கும் பணிக்கு ரூ.8,50,000/– மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | Thiru. S.Ashokan, Karur | 0.14% குறைவு |
| 2 | M/S RPS Construction, Karur | 0.23% அதிகம் |
| 3 | M/s Eagle Packers, Karur | 0.88% அதிகம் |

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Thiru.S.Ashokan, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.8,30,946/– மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/2022)

**தீர்மான எண்.1052** பதிவு செய்யப்பட்டது

**10)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47 பண்டுதகாரன்புதூரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நமக்கு நாமே திட்டம் அரசாணையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 1/3 பொதுமக்களின் பங்கு தொகை ரூ.3,33,334/– திருவாளர்கள்.எம்.தங்கவேல், நளினி, ரவிசந்திரன் பழைய சுக்காலியூர், மதுரை பைபாஸ் ரோடு, கரூர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு மொத்த மதிப்பீடு ரூ.10,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8880/2022/பி1, நாள்:06.12.2022ல் தெரிவித்துள்ளபடி மேற்படி பணிக்கு இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

எனவே கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47 பண்டுதகாரன்புதூரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.10,00,000/–ல் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/9004/2021)

**தீர்மான எண்.1053** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**11)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4550/2023/மா.தி3, நாள்.11.04.2023ல்மாநகராட்சிகளில் 2023–2024ஆம் ஆண்டில் மாநில நிதிக்குழு மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றுதல் (SFC Earthern to BT Surface) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சாலை பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையினை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்குட்பட்டு தயார் செய்து சம்மந்தப்பட்ட மாநகராட்சி தயார் செய்த விரிவான திட்ட அறிக்கையினை மாநகர பொறியாளர் கூர்ந்தாய்வு செய்து மேலனுப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, **மாநில நிதிக்குழு நிதி திட்டம் 2023–2024ம் ஆண்டின் கீழ்** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1,2,3 மற்றும் 4 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் 14.891 கி.மீட்டர் நீளத்திற்கு மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றும் (SFC Earthern to BT Surface) பணிக்கு ரூ.12.66கோடி மதிப்பீட்டில் விரிவான திட்டக்கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு

உரிய நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்
**2)**மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ரூ.**12.66**கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/3521/2023)**

**தீர்மான எண்.1054** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**12)** இம்மாநகராட்சியில் திரு.கே.செல்வம் மற்றும் திருமதி.பி.ஆர்.தீபா கோவை சாலை கௌரிபுரம் மேற்கு ஆகியோரது நிலத்தில் கட்டிடம் கட்ட அனுமதி பெறப்பட்டது. ஆனால் அப்பகுதியில் கிணறு இருப்பதால் கட்டிடம் கட்டப்படவில்லை. ஆதலால் மழைநீர் சேகரிப்பிற்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள். மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் **2019–2020**ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் நிலுவையாக உள்ளது. எனவே, **12.09.2022**ம் தேதிய நகரமைப்பு அலுவலர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.**25,000/–** வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். **(எப்1/3877/2023)**

**தீர்மான எண்.1055** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான TN47 AL 6770 (TATA ACE) வாகனத்திற்கு பழுதுபணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Shri C.M Motors Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.**28384/–**ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ**30000/–** (முப்பதாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**28384/–**ஐ மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
**4)**பொதுசுகதார பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணை Shri C.M Motors Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(இ7/2298/2023)**

**தீர்மான எண்.1056** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**14)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான TN47 P 4014 Water Supply Tanker Lorry வாகனத்திற்கு **2023–2024**ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**229488/–**ஐ பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **14.03.2023–**ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனையில் கீழ்கண்ட விவரங்கள்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sri Ganpathy Motors Works. Gopichettipalyam | 279440 |
| 2 | Lakshmi Auto Diesel Works, Mettur Dam | 229488 |
| 3 | Mani Motor & Traders, Mettur Dam | 251216 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**1)**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Lakshmi Auto Diesel Works, Mettur Dam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**2)**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி Lakshmi Auto Diesel Works, Mettur Dam நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும். மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**3)**மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.229488/—ஐ குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ7/1858/2023)**

**தீர்மான எண்.1057** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**15)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வாங்கல் சாலையில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு **2023 –2024—ம்** ஆண்டிற்கான மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக உரிமம் புதுப்பித்தல் சான்று பெறுவதற்கான தொகை ரூ. **43600/—** ஐ தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கரூர் அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2)**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உரிமம் புதுப்பித்தலுக்காக **(2022—2023)** மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சான்று பெறுவதற்கான தொகை ரூ.**43600/—** ஐ தமிழ்நாடு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கரூர் அவர்களுக்கு வழங்கலாம்.

**3)**செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். **(இ5/4671/2012)**

**தீர்மான எண்.1058** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**16)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் (புல எண்.**103**) பகுதியில் கம்பி வேலி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக **09.03.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.65லட்சம்**

1. Thiru.N.Kirubakaran, Karur மதிப்பீட்டைவிட 0.20% சதம் குறைவு

2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 11.57% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு

**1)**மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**825**, நாள்.**31.01.2023**ம் தேதி ரூ.**1.65**இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.N.Kirubakaran, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

**3)**மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **10.03.2023**ல் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/7045/2022)**

**தீர்மான எண்.1059** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**17)** திரு.ஏ.லாரன்ஸ், 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1)மாவடியான் கோவில் தெரு வாசவி அரசு உதவி பெறும் பள்ளி அருகில் பழுதடைந்துள்ள நிலையில் உள்ள பொதுகழிப்பிடத்தை சீரமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)வாசவி அரசு உதவி பெறும் பள்ளி அருகில் உள்ள மழைநீர் வடிகாலை சரிசெய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3)கண்ணார சந்து பகுதியில் தார் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)கண்ணார சந்திலிருந்து ஆற்று இறக்கம் வரை மழைநீர் வடிகால் மற்றும் தார் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
5)வ.ஊ.சி முதல் தெரு இருபுறமும் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
6)வ.ஊ.சி 5வது தெரு இருபுறமும் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
7)வ.ஊ.சி 5வது தெருவில் சாக்கடை பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதை சீரமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
8)கண்ணார சந்து பகுதியில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தை சீரமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1060** திரு.ஏ.லாரன்ஸ், 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திருமதி.வே.நந்தினி, 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**18)** திருமதி.ஆர்.புவனேஸ்வரி, 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

29வது வார்டுக்குட்பட்ட இராமானுஜம் நகர் தெற்கு பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் V.செந்தில்பாலாஜி அவர்களின் அறிவிறுத்தல்படி தார்சாலை அமைத்து தந்தார்கள். அந்த சாலைக்கு முத்தமிழ் நகர் என்று பெயர் வைத்து பெயர் பலகை இரண்டு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1061** திருமதி.ஆர்.புவனேஸ்வரி, 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திருமதி.சி.யசோதா, 30வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**19)** திரு.பா.பூபதி, 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

16வது வார்டுக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள பல்வேறு மின்கம்பங்களில் மின்கம்பிகள் இல்லாத காரணத்தினால் தெருவிளக்குகள் அமைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகையால் அந்த மின்கம்பங்களில் மின் கம்பிகள் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

<u>மின்கம்பிகள் இல்லாத இடங்கள் விவரம்</u>
1) ஜி.ஆர்.வி. நகர் 10வது கிராஸ்
2) முத்து நகர் 1வது கிராஸ் கோவில் அருகில்
3) முத்து நகர் 2வது கிராஸ்
4) சாய் நகர் 2வது கிராஸ்
5) சுப்ராயன்தோட்டம் மெயின் ரோடு பேருந்து செல்லும் வழி
6)RA நகர் 1 வது கிராஸ்
7)RA நகர் 2வது கிராஸ்
8)ஜே.ஜே கார்டன் 10அடி சாலை
9)ஜே.ஜே கார்டன் கடைசி கம்பெனிஅருகில்
10)ஈ.பி காலனி மெயின் ரோடு பெரியார் நகர்
11)பெரியார் நகர் 3வது கிராஸ் கோவில் அருகில்

12)பெரியார் நகர் 2வது கிராஸ் கடைசி
13) அமர்ஜோதி கார்டன் 3வது கிராஸ்

**தீர்மான எண்.1062** திரு.பா.பூபதி, 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திரு.கே.சக்திவேல், 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**20)** திருமதி.எஸ்.நிர்மலாதேவி, 25வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1)புதிய பேருந்து நிலையத்தில் தென்புறத்தில் பழுதடைந்த கடைகளை அகற்றிய பிறகு அந்த இடத்தில் பயணியர் நிழற்குடைகளை தற்காலிகமாக அமைத்து தருவதற்கு இம்மன்றம் தீர்மானிக்கவும்.
2)காந்தி புரத்தில் உள்ள 10அடி சிமெண்ட் சாலையை புதுபித்து தருவதற்கு இம்மன்றம் தீர்மானிக்கவும்.
3)காந்திபுரம் மெயின் ரோடு, வேலம்மாள் லே–அவுட் பகுதிகளுக்கு தார் சாலை அமைக்க இம்மன்றம் தீர்மானிக்கவும்.
4)கோவை ரோட்டில் கரூர் டிபன் சென்டரில் இருந்து வி.கே.ஏ செட் வரை பாதாள சாக்கடை அமைக்க பொதுநிதியிலிருந்து ஆவண செய்யவும்.
5)பழனியப்பா தெரு பரமத்தியார் வீட்டின் எதிர்புரம் உள்ள திறந்தவெளி கழிப்பிடத்திற்கு பாதாள சாக்கடை அமைத்து தருவதற்கு இம்மன்றம் தீர்மானிக்கவும்.
6)காமாட்சி அம்மன் கோவில் வடக்கு தெருவில் இருபுறமும் மழைநீர் வடிகால் பணி செய்ய இம்மன்றம் தீர்மானிக்கவும்.
7)காமாட்சிஅம்மன் கோவில் கிழக்கு தெரு, மேற்கு தெரு, நடுத்தெரு, வடக்கு தெரு, செங்குந்தபுரம் குறுக்கு தெரு பகுதிகளுக்கு சாக்கடை, தார்சாலை அமைக்க இம்மனறம் தீர்மானிக்கவும்.
8)செங்குந்தபுரம் 2வது, 4வது குறுக்கு தெரு, பழனியப்பா தெருவில் புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கு இம்மன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1063** திருமதி.எஸ்.நிர்மலாதேவி, 25வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திரு.மா.ரமேஷ், 26வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**21)** திருமதி.ஆர்.தேவி, 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

27வது வார்டிற்குட்பட்ட வையாபுரி நகர் 3வது கிராஸில் இதுவரை பாதாள சாக்கடை (UGD) வசதி இல்லை. மேலும் இப்பகுதியில் உள்ள சாக்கடையும் சரியாக வடிகால் செல்லாமல் அடைப்பு ஏற்பட்டு பழுது அடைந்துள்ளது. ஆகவே இப்பகுதிக்கு புதிய பாதாள சாக்கடை (UGD) வசதியையும், புதிய மழைநீர் வடிகால் வசதியும் செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1064** திருமதி.ஆர்.தேவி, 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திருமதி.ம.சுகந்தினி, 28வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**22)** திரு.எம்.சரவணன், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1)கோதூர் ரோடு வெற்றி விநாயகர் கோவில் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி நியாய விலை கடைக்கு கட்டிடம் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)அரிக்காரம்பாளையம் மெயின் ரோட்டில் ஆக்கிரமிப்பை அகற்றி இருபுறமும் கழிவுநீர் கால்வாய் அமைத்தும், தார்சாலை மிக மோசமான நிலையிலும் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் உடனடியாக தார் சாலை அமைத்தும் தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1065** திரு.எம்.சரவணன், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திரு.க.வடிவேல் அரசு, 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**23)** திருமதி.க.அருள்மணி, **19**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19ல் உள்ள ஆதிமாரியம்மன் குறுக்குத் தெரு 1,2,3,4,5 தெருக்களிலும் புதியதாக மின்கம்பி அமைத்து தெருவிளக்கு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1066** திருமதி.க.அருள்மணி, **19**வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்து திரு.ஏ.லாரன்ஸ், **20**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மேயர்
கரூர் மாநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி